முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ஜனகமகரிஷி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

12.04.2019, வெள்ளிக்கிழமை

1. **ஓம் சரவண ஜோதியே நமோ நம**
**ஓம் சரவண சித்தியே நமோ நம**
**ஓம் என்று உயர் செபதபம்**
**ஓங்காரனாக பரவி பிரணவக் குடிலில்**

2. குடிலில் அரங்க ஞானி வழியாக
குறையிலா ஆறுமுகன் சக்தியாக
நாடிய மக்களுக்கு ஆசி தர
நம்பி வாரீர் அருள் பெறுவீர் எனக் கூறி

3. கூறியே நித்ய பிரசன்ன ஆசியை
குறையிலா **விளம்பி சேல் திங்கள்**
**தெரியவே இருபான் நவதிகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 29ம் நாள் 12.04.2019, வெள்ளிக்கிழமை)**
**தேசிகனுக்கு ஜனகமகரிஷி யானும்**

4. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர் ஜோதி சரவண ஜோதி
தானதரும பலமுடன் எங்கும்
தவராசன் நாமம்பட ஏற்றப்பட

5. ஏற்றம்பட்டு வழிபாடு பெருக
எங்கும் ஆறுமுகனாரின் ஆசி
ஆற்றல்பட பரவி பாதுகாப்பு
அழிவில்லா மேன்மை காண்கும்

6. காண்கவே ஆசான் சொல்லும்
கண்ணியமான நெறிமுறைகள்
ஆன்மீக ஞான பூமியாக்கும்
ஆற்றல்மிக்க சக்திகளாயிருக்க

7. இருக்கவே இந்த கலியுகம்
இணையிலா தெய்வபலம் பெறும்
கருத்தாக பல மாற்றங்கள் கண்டு
கந்தவேலன் ஆட்சியாக மாறும்

8. மாறுதலை செய்ய வந்த ஞானி
மகத்துவமிக்க அரங்க ஞானி
ஆறுமுகனார் வழிபாட்டை பெருக்கி
அறம் வளர்க்க ஞானயுகம் ஆகும்

9. ஆகுமே மக்களை மாய்க்கின்ற
ஆசை கன்மம் மாயை யாவும்
வகை கூடா விலகி ஒடும்
வடிவேலன் அருளால் வல்லமை பெறும்

10. பெருமை தரும் தொண்டர்படை
பிசகில்லா கொண்ட ஞானியே
வறுமையிலா உலகம் உருவாக்க
வள்ளலாய் வந்த தவசியே

11. தவசியே உன்னால் மாற்றமும்
தருமபலத்தால் ஞான ஆட்சி காலம்
அவனி சடுதி அடைய நேரும்
அறிவித்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் ஜனகமகரிஷி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

**ஓம் சரவண ஜோதியே நமோ நம!**

**ஓம் சரவண சித்தியே நமோ நம!**

என்றே முருகப்பெருமானின் உயர்வான மந்திர ஜெபங்கள் முருகப்பெருமானின் வழிபாடாக ஓங்காரக்குடிலில் ஆறுமுக அரங்கமகாதேசிகனார் மூலமாக முருகப்பெருமானின் அருட்சக்தி வடிவமாக பரவி, அரங்கமகானை நாடி வருகின்ற மக்களுக்கு அருளாசிகளை வழங்கி வருகின்றபடியினாலே உலக மக்களே ஆறுமுக அரங்கனை முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனை முழுமையாக சந்தேகம் இன்றி நம்பிக்கையோடு வாரீர், ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை வந்துமே பயபக்தியுடன் அரங்கனை பணிந்து வணங்கிட சகல அருள் பலத்தையும் அருளாசிகளையும் பெற்று சிறப்படைவீர்கள் எனக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 29ம் நாள் 12.04.2019, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே ஜனகமகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் ஜனகமகரிஷி.

உயர் ஞான ஜோதியாம் சரவணஜோதிதனை தானதருமங்களை செய்து தானதரும பலத்துடன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருநாமங்களை “ஓம் ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம” என்றே அரங்கரின் நாமங்களைச் சொல்லி ஏற்றி வைத்து சரவணஜோதியே நமோ நம என்று சொல்லி ஜெபதபங்களை செய்து வழிபாடுகளைச் செய்து வந்து இத்தகைய முறையில் சரவணஜோதி வழிபாடுகளை உலகோர் எல்லாம் செய்யும்படி தூண்டி உலக மக்கள் பயபக்தியுடன் சரவணஜோதி வழிபாட்டினை அரங்கமகானை முன்னிறுத்தி தானதருமங்களைச் செய்து தர்மபலத்துடன் செய்து வரவர, உலகமெங்கும் முருகப்பெருமானின் அருளாசிகள் மிகுந்த ஆற்றலுடன் பரவி உலகோர் செய்யும் சரவணஜோதி வழிபாட்டின் ஜோதி மூலமாக உலகமெங்கும் முருகப்பெருமானின் அருளாசிகள் மிகுந்த ஆற்றலுடன் பரவி உலகோர் செய்யும் சரவணஜோதி வழிபாட்டின் ஜோதி மூலமாக உலகமெங்கும் வெளிப்பட்டு உலகமெலாம் முருகப்பெருமானின் அருள் பாதுகாப்பு பெருகி உலகமே அழிவினின்று மீண்டு அழிவில்லாத வகையில் உயர்வடையும்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகான் சொல்லுகின்ற தூயநெறிமுறைகளும் ஞானக் கொள்கைகளும் இவ்வுலகோர் கடைப்பிடித்திட உலகமே ஆன்மீக ஞானபூமியாக மாறிடும். அரங்கனின் நெறிமுறைகள் எல்லாம் இவ்வுலகை ஆன்மீக ஞானபூமியாக்கும் ஆற்றல்மிக்கதாய் இருப்பதினாலே இந்த துன்பம்மிக்க கலியுகமும் அரங்கரின் நெறிகளால் மாற்றம் அடைந்து ஈடு இணையில்லாத வகையிலே தெய்வீக சக்திகளைப் பெறும். அற்புதமான நல்மாற்றங்களை இவ்வுலகம் அடைந்து அமைதியும், ஆனந்தமும் ஆற்றலும் ஞானமும் மிகுந்த முருகப்பெருமானின் ஞானஆட்சியாக மாறிடும்.

கலியுகத்தின் கொடுமைகளால் துன்பப்படும் இவ்வுலகினை துன்பங்களில் இருந்து மீட்டு வழிநடத்தி ஞானயுகமாக யுகமாற்றம்தனை செய்யவே அளவிலா ஆற்றலுடன் முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகாதேசிகனார் உலகினில் முருகப்பெருமானின் வழிபாட்டினை பெருக்கி அறம்தனை பெருக்கிட பெருக்கிட இவ்வுலகம் ஞானிகளின் அருளினால் ஞானயுகமாக மாறிடுமப்பா.

ஆதலினால் உலக மக்களே உங்களை பிறவித் துன்பத்தினில் ஆழ்த்துகின்ற ஆசை, கன்மம், மாயை ஆகிய யாவையும் ஓங்காரநாதன் ஆறுமுக அரங்கனின் கருணையாலே உங்களை விட்டு விலகி ஓடிடும். வடிவேலன் முருகப்பெருமான் அருளினாலே இவ்வுலகம் வல்லமையைப் பெறும்.

**பெருமைமிக்க தொண்டர் படையைக் கொண்டிட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே, வறுமையற்ற உலகினை உருவாக்க அவதாரமாக வந்திட்ட மகா ஞானியே அரங்கா வள்ளல் ஞானியாகி அளவிலா தருமம் செய்யும் தருமத்தின் காவலனே மகாதவசியே உம்மால் இந்த உலகம் உமது தரும பலத்தினால் இந்த உலகம் ஞானஆட்சியை விரைந்து அடைந்திடும்** எனக் கூறுகிறார் மகான் ஜனகர் மகரிஷி.

–சுபம்–

**அறியதோர் விகாரியை ஆறுமுகன் ஆண்டிட**
**பெரியதோர் மாற்றம் பேருலகு காண்குமே.**

**– மகான் ஆறுமுக அரங்கமகாதேசிகர்.**